இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 22 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 15 – சனிக்கிழமை 31 ஆகஸ்டு 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 22 : Thiruvalluvar Year - 2055 - Aavani 15 - Saturday 31 August 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


### சென்னை – கோவை – மதுரையில் – ரூ.900 கோடி முதலீட்டில் – 4,100 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் – நோக்கியா உள்ளிட்ட

# 6 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

### அமெரிக்க நாட்டின் – சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பம் !





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், உலகின் முன்னணித் தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப், இன்ஃபின்க்ஸ், அப்ளைட் மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, கோவை மற்றும் மதுரையில் 4100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட காட்சிகள்!

**சான் பிரான்சிஸ்கோ, ஆக. 31-**

**உலகின் முன்னணித் தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப், இன்ஃபின்க்ஸ், அப்ளைட் மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, கோவை மற்றும் மதுரையில் 4100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (29.8.2024) அமெரிக்க நாட்டின், சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்ஃபின்க்ஸ் ஹெல்த்கேர் மற்றும் அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, கோவை மற்றும் மதுரையில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்கிற பொருளாதார இலக்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு நிர்ணயித்து, அதற்கான முன்னெடுப்புகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிற்கு அரசு முறைப் பயணமாக 27.8.2024 அன்று இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு சான் பிரான்சிஸ்கோ நகரிற்கு 28.8.2024 அன்று சென்றடைந்தார்.

சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

**1. நோக்கியா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

நோக்கியா நிறுவனமானது ஃபின்னிஷ் பன்னாட்டு தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் நுகர்வோர் மின்னணு நிறுவனம் ஆகும். இது ஒரு பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

சென்னையில் நோக்கியா நிறுவனம் பன்னாட்டு விநியோக மையம் மற்றும் உற்பத்தி நிலையத்தை நிறுவி செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நோக்கியா நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 450 கோடி ரூபாய் முதலீட்டில், 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில், சிறுசேரி சிப்காட்டில் உலகின் மிகப்பெரிய நிலையான நெட்வொர்க் சோதனை வசதி கொண்ட புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

> **தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்கிற பொருளாதார இலக்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு நிர்ணயித்து, அதற்கான முன்னெடுப்புகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.**

**2. பேபால் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இந்த ஒப்பந்த நிகழ்வில், நோக்கியா நிறுவனத்தின் சார்பில் தலைமை உத்தி மற்றும் தொழில்நுட்ப அலுவலர் (Chief Strategy and Technology Officer) நிஷாந்த் பத்ரா, நிலையான நெட்வொர்க் வணிகக் குழு தலைவர் (President - Fixed Network Business Group) திருமதி சாண்டி மோட்லி ஆகியோர் பங்கேற்றனர்.

பேபால் ஹோல்டிங்ஸ் நிறுவனம் (PayPal Holdings, Inc.) அமெரிக்க பன்னாட்டு நிதி தொழில்நுட்ப நிறுவனமாகும். இது ஆன்லைன் பணப் பரிமாற்றங்களை ஆதரிக்கும் பெரும்பாலான நாடுகளில் ஆன்லைன் பணப்பரிவர்த்தனைக்கு உதவுகிறது. காசோலைகள் மற்றும் பண ஆணைகள் போன்ற பாரம்பரிய காகித முறைகளுக்கு மின்னணு மாற்றாக இது செயல்படுகிறது.

பேபால் நிறுவனம் சென்னையில் சுமார் 2,500-க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பேபால் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே சுமார் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவிற்கான மேம்பட்ட வளர்ச்சி மையம் (Advanced development center focussed on AI) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், பேபால் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் (EVP - Chief Technology Officer) ஸ்ரீனி வெங்கடேசன், சர்வதேச அரசாங்க உறவுகள் தலைவர் (Head of International Govt. Relations) ஜி - யாங் டேவிட் ஃபேன் ஆகியோர் பங்கேற்றனர்.

**3. ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனம் (Yield Engineering Systems) செமிகண்டக்டர் சுற்றுச்சூழல் அமைப்பிற்கான தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் செயல்முறை உபகரணங்களை வழங்கும் முன்னணி நிறுவனமாகும். மேம்பட்ட பேக்கேஜிங், ஐஓடி, லைஃப் சயின்ஸ், ஏஆர்.விஆர், எம்இஎம்எஸ், பவர் உள்ளிட்ட பலதரப்பட்ட சந்தைகளில் தொழில்நுட்பத் தலைவர்களுக்கு புதுமைகளை வழங்கும் மேற்பரப்பு மற்றும் பொருட்களை மேம்படுத்தும் அமைப்புகள் (அதாவது வெப்ப செயலாக்கம், ஈரச் செயலாக்கம், பிளாஸ்மா சுத்தம் செய்தல் மற்றும் பூச்சு) போன்றவற்றை வழங்குகின்றன. (They provide surface and materials enhancement systems (i.e. thermal processing, wet processing, plasma cleaning, and coating) that enable innovation for technology leaders across a wide spectrum of markets, including advanced packaging, IoT, life sciences, AR/VR, MEMS, power, and sensors)


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## "வாய்ப்புகள் குவிந்துள்ள பூமியில் உள்ளேன்"

### - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



**அமெரிக்கப் பயணத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், "வாய்ப்புகள் குவிந்துள்ள பூமியான அமெரிக்காவில் தற்போது உள்ளேன்" என்று தெரிவித்துள்ளார். "தமிழ்நாட்டின் செழுமைக்கு ஆதரவைத் தேடி வந்திருக்கிறேன்" என்றும் அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

### சென்னையில் நாளை – செப்.1 அன்று

## ஃபார்முலா-4 கார் பந்தயம் நடத்தத் தடையில்லை!

### சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, ஆக. 31–

சென்னையில் ஃபார்முலா – 4 கார் பந்தயம் நடத்த தடையில்லை என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தனியார் அமைப்பு சார்பில் சென்னையில் ஃபார்முலா–4 ஸ்ட்ரீட் கார் பந்தயம் ஆக.31 மற்றும் செப்.1 ஆகிய தேதிகளில் தீவுத்திடலை சுற்றிலும் உள்ள வட்ட வடிவ சாலையில் நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஆயத்த ஏற்பாடுகளும் இரவு, பகலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த கார் பந்தயத்துக்கு தடை கோரி பா.ஜ.க. செய்தித் தொடர்பாளரான ஏ.என். எஸ்.பிரசாத் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை பொறுப்பு தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் மற்றும் நீதிபதி பி.பி. பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள், இந்த கார் பந்தயம் தொடர்பாக ஏற்கெனவே உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தியது குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்திருந்தனர்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ஆஜராகி, "இந்த கார் பந்தயத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது, எனக் கூறி தமிழ்நாடு அரசின் அறிக்கையை தாக்கல் செய்தார். இதையடுத்து நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை வியாழக்கிழமை மாலைக்கு தள்ளி வைத்திருந்தனர்.

**தடை இல்லை**

இதைத் தொடர்ந்து நீதிபதிகள் பிறப்பித்த இடைக்கால உத்தரவில், 'சென்னையில் ஃபார்முலா–4 கார் பந்தயம் நடத்த அனுமதியளிக்கப்படுகிறது. கார் பந்தயம் நடத்த தடை விதிக்க முடியாது. எஃப்ஐஏ எனும் சர்வதேச கூட்டமைப்பு உரிமத்தைப் பெற்று பந்தயத்தை நடத்த வேண்டும். இந்த பந்தயம் நடத்தப்படுவதால் மருத்துவமனை மற்றும் ரயில் நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் யாருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் கார் பந்தயத்தை நடத்துவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும்' என்றனர். மேலும், பிரதான வழக்கில் தமிழ்நாடு அரசு 6 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு, வழக்கின் விசாரணையை 6 வாரங்களுக்கு தள்ளி வைத்தனர்.

**தயார் நிலையில் பந்தயம்!**

இதற்கிடையே இந்த ஃபார்முலா 4 கார் பந்தயத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்து போட்டிக்காக தயார் நிலையில் உள்ளது. அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டியில் பங்கேற்க வந்தவர்கள் தெரிவித்தனர்.